# அறிவியல் நகரம்

## உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை - 600 025.

கடிதஎண். 003/அ.ந/ அ.அ/2023 நாள் 09.06.2023

பெறுநர் :
இயக்குநர் அவர்கள்
பள்ளிக்கல்வித் துறை
டி.பி.ஐ. வளாகம்
சென்னை – 600 009

அய்யா,

பொருள்: அறிவியல் நகரம், சென்னை – 25 – "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2022–2023" – அறிவிப்பு மற்றும் பரிந்துரைத்தல் – தொடர்பாக

பார்வை: அரசாணை எண். 192. உயர்கல்வித்(பி2) துறை, நாள் 13.08.2018

-----

மாணாக்கர்களின் அறிவை வடிவமைப்பதிலும், அறிவியல் கற்றல் மீதான ஆர்வத்தை வளர்ப்பதிலும், உயர் கல்வியில் அறிவியல் துறையை எடுப்பதற்கும் மற்றும் அறிவியலாளர்களாக உருவாக்குவதற்கும் அறிவியல் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அறிவியல் ஆசிரியர்களின் விலைமதிப்பற்ற பணிகளை அங்கீகரிக்கும் விதமாக பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைக்கு இணங்க, அறிவியல் நகரம் 2018–2019 முதல் சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி அளவில் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் அறிவியல் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அறிவியல் நகரத்தால் பத்து ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு, ரொக்கப்பரிசாக தலா ரூ. 25,000/–(ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) காசோலையாகவும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதில் ஐந்து ஆசிரியர்கள் தமிழ்வழிப் பள்ளிகளில் (Tamil Medium Schools) இருந்தும் மற்றும் ஐந்து ஆசிரியர்கள் திறந்தநிலைப் பிரிவிலும் (open category) தேர்ந்தெடுக்கப்படுவர்.

**தொலைபேசி:** 044-24454054, 24454034, **நிகரி:** 044-24454054,
**மின்னஞ்சல்:** scicitychennai@gmail.com, engumariviyal@gmail.com **இணையதளம்:** www.sciencecitychennai.in

2022–2023 – ஆம் ஆண்டிற்கான "சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது" வழங்கிட ஏதுவாக மேற்கூறியவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ள துறைகளில் அறிவியல் ஆசிரியர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அறிவியல் நகரத்தால் வரவேற்கப்படுகிறது. அறிவியல் ஆசிரியர்களின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பரிந்துரைக்கப்பட்டு அறிவியல் நகர அலுவலகத்திற்கு 14.09.2023 அல்லது அதற்கு முன் மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும் வண்ணம் அனுப்புமாறு தங்கள் கீழ் பணிபுரியும் அலுவர்களை அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(ஒ.ம்) திருமதி. சு. மலர்விழி, இ. ஆ. ப.,
துணைத்தலைவர்

17/08/2023
அறிவியல் அலுவலர்

நகல்: அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்